1994 ஜனவரி 3]

128--

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைத்தல்.

* *21186*–**டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:**

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய் மொழியில் அல்லது செண்பகராமன் புதூரில் தொழிற்பேட்டை உடனடியாக அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சிறுதொழில் கூடங்கள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் செண்பகராமன் புதூரில் தொழிற்பேட்டை துவங்க தகுதியான நிலம் வட்டாட்சியர் உதவியுடன் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் கிளை மேலாளர் தேர்ந்தெடுத்திருக்கிறார். குறைந்தபட்சம் 10 தொழில்முனைவர்களாவது ஆரல்வாய்மொழியில் அல்லது சென்பகராமன் புதூரில் தொழில் துவங்க 25 விழுக்காடு விளிம்புத் தொகையுடன் முன்வருவார்களேயானால் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் தொழிற்பேட்டை ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்யும்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்பு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தமிழகத்தில் படிப்பறிவில் குமரி மாவட்டம் இரண்டாவது இடத்திலும் பெண்கள் படித்த அளவில் முதலாவது இடத்திலும் என்ற நிலையில் உள்ளது. இங்கு தொழில் கல்வி படித்து வேலை இல்லாத பட்டதாரிகள் அதிகம் உள்ளனர். அவர்கள் தனியாக தொழில் தொடங்குவதற்கு மக்கள் அளிப்பதற்காக தொழில் துறையில் மிகவும் பின்தங்கியுள்ள கன்னியாகுமரி தொகுதியில் உள்ள ஆரல்வாய்மொழியில் அல்லது செண்பகராமன் புதூரில் தொழிற்பேட்டை அமைத்துத் தருவதன் மூலமும் அந்த தொழில் துறையை ஊக்குவிக்க வழிவகை செய்யப்பட வாய்ப்பு உள்ளது. மேலும் குமரி மாவட்டத்தில் நிலத்தின் மதிப்பு அதிகம் என்பதால் அரசே தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்து அமைத்திட உதவுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியது போல தொழில்

முனைவோர் 25 விழுக்காடு விளிம்புத் தொகையுடன் முன்வருவார்களேயானால் அம்மாதிரி இடங்களைத் தேர்ந்தெடுத்து விரைவாக ஆரம்பிப்பதற்கு அரசு தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *129*, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வினா எண் *130*, திரு. ஆ. சுப்புரத்தினம்; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

130–

பெண் சிசுக் கொலை புகார்கள் மீது நடவடிக்கை எடுத்தல்.

20133–*திரு. ஆ. சுப்புரத்தினம்:**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

பெண் சிசுக் கொலை தொடர்பான குற்றங்களுக்காக கடந்த ஓராண்டு காலத்தில் எவ்வளவு பேர்கள் மீது புகார்கள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கக் கூடிய வகையிலே தங்களை பேரவையினுடைய துணைத் தலைவராக நியமித்து இன்றைக்கு நம்முடைய மாவட்டத்திற்கு ஒரு சிறப்பை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்பாதங்களை வணங்கி, என் சார்பாகவும் நம் மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா மாவட்ட பொது மக்களுடைய சார்பாகவும் என்னுடைய நன்றியை இந்த நல்ல வேளையிலே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆம் என்று பதில் கூறியிருக்கிறார்கள். இப்படி பெண் சிசு கொலை நடைபெறுவது இன்னும் தொடர்கிறது என்றால் எந்தெந்த மாவட்டங்களில் இந்த பெண் சிசு கொலைகள் அதிகம் நடைபெறுகிறது என்ற புள்ளிவிவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.